**OPEN ACCESS**

Volume: 5

Issue: 2

Month: October

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.07.2020

Accepted: 05.09.2020

Published: 01.10.2020

Citation:
Santhi, S. (2020). Ma Manigal at the Vennar River Bank. *Shanlax International Journal of Tamil Research,* 5(2), 26–37.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i2.3484

*Corresponding Author:
drbsr178alu@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Ma Manigal at the Vennar River Bank

**Dr. S. Santhi**
*Guest Faculty, Department of History*
*Alagappa University, Karaikudi, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-6965-2478

**Abstract -** Thanjai Mamani Koil near Thanjavur is a set of three Vishnu temples. The legend of Thanjavur District vennatrankarai Mamani temple states that a sage called Parasara sprayed nectar that he obtained from the ocean of milk in the Manimutha river . Then he built an ashram on the banks of the river and started performing penances and yagnas with other sages. In the vicinity were three demons- Thanjakan, Thandakan and Tharakasura. They had received deadly boons from lord Shiva. They began to create obstacles to the penance. The sage requested them to stop this but the demons would not listen to him. Sage Parasara then approached lord Shiva for protection. Lord Shiva sent Kalidevi to destroy them. However the demons drank the river water which was mixed with the nectar and came alive again. Then the sage approached lord Vishnu. Lord Vishnu took the the avatar of Narasimha (lion headed ) and defeated Thanjaka who took the elephant form. The Lord placed the demon on his lap to kill him when the demon gained wisdom, repented and promised to shed his cruel ways. He also begged the Lord to stay in the place and bless everyone. Hence this place was named as Thanjamapuri. Thandakan hid himself under the earth, after seeing the defeat of Thanjaka. The Lord took the form of Varaha (boar) entered the hiding place and killed the demon. Tharaka was killed by Kali. After the destruction of the three demons, the Lord appeared before sage Parasara as Neelamega Perumal. At this place, the Lord has three names in three separate Hindu temples. In the Veera Narasimha temple, lord Vishnu appears with a discus as Chakrathazhwar. In the Neelamega Perumal temple, Mahalakshmi is found to the left of Lord Narasimha. This Narasimha is also called Valavandhai (right side) Narasimha. It is advised that those of short tempered nature should correct themselves if they wish to have the grace of Mahalakshmi. Vishnu is considered as to be the king of this whole universe and he has the sengol (baton) in his hand. Thaayar Senkamalavalli Nachiyar has a seperate shrine. Outside the Thaayar shrine, there is a pillar, on one side Narasimha is portrayed whereas on the other side Lord Hanuman is found. The vimanam (vehicle) of this temple in India is called Soundarya vimanam.

**Keywords:** Tamil Nadu History, Architecture, Vennar, Thanjavur , Mamani temple, Manimutha river, avatar, Neelamega Perumal, Varaha, Narasimha, Vimanam

**References**

1. ………………. Gazetteers of the Thanjavur District, vol. I, (1906), Madras.
2. Alexander, K.C., (1975) Agrarian Tension in Thanjavur, National Institute of Community Development, Hyderabad.
3. Annual Report of Epigraphy (ARE) Archaeological Survey of India (ASI) New Delhi.
4. Baliga, B.S., (1957) Thanjavur District Hand Book, Madras.
5. Bhatt, S.C., (1999), District Gazetteers of India, New Delhi.
6. Gabriele Dietrich, (1977), Religion and People's Organisations in East Thanjavur, The Christian Institute for the Study of Religion and Society, Madras.
7. Hemingway, F.R., (1906), Madras District Gazetteers, Thanjavur District, vol. I, Madras.

8. Nilakanta Sastri, K.A., (1975), The Colas, University of Madras, Madras.
9. Raju.S, (1994), Nenjai Allum Thanjai, Publication, kongu Aivu Maiyam, Thanjavur.
10. Santhi. S & Saravanakumar. AR., (2019) "Avudaiyar Kovil Inscriptions and Copper Plates - A Study." Journal of Modern Thamizh Research, vol. 7, no. 1, p. 762-776, Raja Publication, Trichy. https://www.researchgate.net/publication/333446842 Avudaiyar Kovil Inscriptions And Copper Plates- A Study
11. Santhi, S., (2019), The Devakotta Sculptures of the Temples around Avudayar Kovil, International Journal of Tamil Language and Literary Studies, 13 A Bi-Yearly Peer-Reviewed International Journal, E- ISSN:2581-7140, vol. 2: no. 1, P. 83-91, Publication, www.ijtlls.com https://www.researchgate.net/publication/334952398_The_Devakotta_Sculptures_of_the_Temples_around_Avudayar_Kovil
12. Santhi. S., (2020), Avudaiyarkovil and its Architecture, International Journal of Tamil Language and Literary Studies, 13 A Bi-Yearly Peer-Reviewed International Journal, E-ISSN: 2581-7140, vol. 2, no. 2, P. 13-27, Publication, DOI:10.5281/zenodo.3628597, www.ijtlls.com
13. Santhi.S., (2020), Avudaiyarkoyil vattara Kalvedukal, Kotravai Publication, Madurai. ISBN: 978-93-86568-75-5. https://www.researchgate.net/publication/342365536 Avudaiyarkoyil Vattara Kalvettukal
14. Santhi.S., (2020), Avudaiyarkoyil vattara Kattatakkalai, Kotravai Publication, Madurai. ISBN: 978-93-86568-76-2. https://www.researchgate.net/publication/342623469 Avudaiyarkoyil Vattara Kattatakkalai.
15. Santhi.S., (2020), Avudaiyarkoyil vattara sirpangal, Kotravai Publication, Madurai. ISBN: 978-93-86568-77-9.
16. Santhi.S & Gunasekaran.S, (June 2020) The Important Places of Tuticorin District - A Geographical Map Perspective, Volume 14, Issue-6, Journal of Xidian University, https://doi.org/10.37896/jxu14.6/274, ISSN No: 1001-2400, http://xadzkjdx.cn/, pp. 2298-2316
17. South Indian Inscriptions(SII) ASI

# வெண்ணாற்றங்கரையில் மாமணிகள்

*முனைவர் செ. சாந்தி*
கௌரவ விரிவுரையாளர், வரலாற்றுத் துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

***ஆய்வுச் சுருக்கம்:*** *தமிழர்களின் நீர் மேலாண்மையால் சோழநாடு, நீர்நாடு, நீர்வளநாடு என அறியப்பட்ட ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் மைய நாடியாகக் காவேரி ஆறு வேளாண்மைக்கு வளம் சேர்க்கிறது தஞ்சாவூர் மாவட்டமானது தமிழகத்தின் கிழக்குக் கடற்கரையோரம் அமைந்துள்ளது. புவியின் 9.50 முதல் 11.25 வரையிலான கடகரேகை மற்றும் 78.43. முதல் 70.23 வரையிலான அட்சரேகை இடையே உள்ளது காவேரி நதியின் கழிமுகத்தில் ஐந்து ஆறுகள் பிரிகின்றன. அவை காவேரி, வடவார், வெண்ணார், வெட்டார், குடமுருட்டி போன்றவை ஆகும். இவற்றுள் ஒவ்வொரு ஆறும் ஐந்து கிலோமீட்டர் இடைவெளியில் பாய்வதால் இவற்றுக்குத் திருவையாறு என்றப் பெயரும் வந்தது. இவ்வைந்து ஆறுகளில் ஒன்றுதான் தஞ்சாவூரில் இருந்து திருவையாறு வழியாக கும்பகோணம் மற்றும் மயிலாடுதுறை நெடுஞ்ச ாலையில் சுமார் 5 கி.மீ. தொலைவில் வெண்ணார் பாய்கிறது. பன்னிரு ஆழ்வார்களால் பாடல்பெற்ற108 திவ்யதேசங்களுள் 40 தலங்கள் சோழநாட்டில் பாடல் பெற்றவை. அவற்றுள் ஒன்றுதான் தஞ்சையின் வெண்ணாற்றங்கரையில் அமையப்பெற்றுள்ள மாமணிகள் என்னும் வீரநரசிங்கப் பெருமாள் கோயில், நீலமேகப்பெருமாள் கோயில், மணிக்குன்றப் பெருமாள் கோயில் என்ற இம்மூன்றும் வெண்ணாற்றங்கரையின் மாமணிக்கோயில்கள் என்றும், தஞ்சை மாமணிக் கோயில்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. இக்கோயில்களைப் பற்றி பூதத்தாழ்வார், நம்மாழ்வார், திருமாங்கையாழ்வார் போன்றோர் பாடல்களைப்பாடி. மங்களாசாசனம் செய்துள்ளனர். இக்கோயில்கள் அரண்மனை தேவஸ்தானத்தின் 88 கோயில்களுள் ஒன்றாகும். இத்தலம் பராசரசேத்ரம், வம்புலாஞ்சோலை, அழகாபுரி, கருடாபுரி, சமீவனம், தஞ்சையாளி நகர் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் இலக்கியங்கள், புராணங்கள், கட்டடக் கலைகளைப் பற்றி விளக்குவதாக இந்த ஆய்வானது அமையப்பெற்றுள்ளது*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழக வரலாறு, கட்டக் கலை, நீர் மேலாண்மை, தஞ்சாவூர் மாவட்டம், டெல்டா பகுதி, காவேரி, மாமணிக்கோயில்கள், ஆழ்வார்கள்*

## பெயர்காரணம்

வெண்ணாற்றங்கரையின் பழம்பெரும் பெயர் விண்ணாற்றங்கரை என்பது குறிப்பிடத்தக்கது. இதனைச் சோழமண்டலச் சதகப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

**விண்ணாறு எளிதோ ஆறுதந்த**
**வேளான் குரிசில் வின்னன்அன்றோ**

வின்னன் என்பான் இந்த ஆற்றினை வெட்டினான் எனக் குறிப்பிடுகின்றது. பாண்டியகுலாசனி வளநாட்டு ஏரியூர் நாட்டு விண்ணநேரியான மும்முடிச் சோழநல்லூர் என்னும் செய்தியானது தஞ்சைப் பெரியக் கோயிலின் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. தேவஸ்தானக் கல்வெட்டுக்களில் ஒன்று தஞ்சை மாமணிக்கோயிற் பகுதியைக் காடவன் மாதேவி சதுர்வேதி மங்கலம் (SII Vol: I – 223, P.no.118) எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. மாமணிகள் என்பது பாராசரமகரிஸியின் வேண்டுகோளுக்கிணங்க மூன்று அரக்கர்களை அழித்து பெருமாள் நீலமேகர், வீரநரசிம்மர், மணிக்குன்றர் எனக் காட்சிக்கொடுத்ததே

மாமணிகள் எனப் புராணங்களில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

## நீலமேகம் பெருமாள் கோவில்

பராசர முனிவருக்கும் மாாக்கண்டேயருக்கும் பெருமாள் காட்சி தந்ததால் இத்தலம் பராசர சேத்திரம், மாாக்கண்டேய சேத்திரம் என்னும் பெயர்களுடன் அழைக்கப்படுகின்றது. பராசர முனிவர் தவம் புரிவதற்கு இத்தலத்தினை தோந்தெடுத்து இங்கேவந்த தருணத்தில் தஞ்சகன், தண்டகன், தாரகன் போன்ற அரக்கர்களின் கொடுமைக்குட்பட்டிருந்தார். இந்த கொடுமையான நிலையினை மாற்ற பராசரமுனிவர் பெருமாளிடம் வேண்டிக்கொள்ள அத்தருணத்தில் பெருமாள் நீலமேகப் பெருமாளாக உருவெடுத்து தஞ்சகனுடன் போரிட்ட சூழலில் தஞ்சகன் யானை உருவெடுத்து பெருமாளும் சிங்க உருவெடுத்து தஞ்சகனை வதம் செய்தார். இதைக்கண்டு அஞ்சியத் தண்டகன் பூமியை ஓதும் தருணத்தில் வதம் செய்ததால் ஏகவிரா எனப் புகழப்பட்டார்.

திருமங்கையாழ்வாரின் மங்களாசாசனம் பெற்ற தலம் என்று கருதுவர் (பெரிய திருமொழி, 1-1-6 2-5-3). நாயக்கர் கலைப்பாணியில் கோயிலின் கருவறையானது அரைத்தூண்கள் புமுனைப்போதிகை வடிவங்களைத் தாங்கியுள்ளன. இக்கோயிலில் திருமால் ஸ்ரீதேவி பூதேவியுடன் அமர்ந்த கோலத்தில் உள்ளார். இவை சுதையாலான சிற்பங்களாகும். இக்கோயிலும் நாயக்கர் காலத்தில் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. சோழர் காலத்தைச் சார்ந்த கிரந்த கல்வெட்டுக்கள் சில துண்டுகளாக இருக்கின்றன. மகா மண்டபத்தை மராட்டியர் காலத் தூண்கள் தாங்கி நிற்கின்றன. இங்கே மராட்டியர் கால ஓவியங்களின் எச்சங்கள் இருப்பதைப் பார்க்கலாம். அம்மன் பெயர் செங்கமலத் தாயாராகும்.

## தல இறைவன்

இக்கோயில் இறைவனின் பெயர்நீலமேகப் பெருமாள் என்று குறிப்பிடப்படுகின்றது. இச்சிற்பம் தரையிலிருந்து 12 அடி உயரத்தில் 9 அடி அங்குலத்தில் நான்கு கரங்களைக் கொண்டும் வலது காலை தொங்கவிடப்பட்டு இடதுகால் பீடத்தின் மீது கிடத்தப்பட்டு சுகசனமாக அமாந்தநிலையில் காணப்படுகிறது. தலையில் கீரிட மகுடமும் மார்பில் பலவித அணிகலன்களுடன் தோள்மாலை, தோள்வளை, கடகவளை போன்ற ஆபரணங்களும் கரங்களில் சங்குச் சக்கரத்தை ஏந்தியவாறு அபயம் மற்றும் வரத முத்திரையுடன் பீதாம்பர ஆடை அணிந்து அலங்கரிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் இடது மற்றும் வலது புறத்தில் ஸ்ரீதேவி மற்றும் பூதேவி சிற்பங்கள் 3 அடி உயரத்தில் 0.10 அங்குலத்துடன் சகாசனமாக அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் அனைத்தும் சுதைச் சிற்பங்களாக உள்ளன. இச்சிற்பங்களுடன் உற்சவமூர்த்தியின் சிற்பங்கள் செப்புத் திருமேனியா அமையப்பெற்றுள்ளன. இக்கோயிலில் இறைவியின் சிற்பமானது தனிச்சன்னதிகளுள் ஒன்றாகச் செங்கலமலவள்ளி என்னும் பெயருடன் நான்கு கரங்களைக் கொண்டு நின்ற நிலையில் சுதைச் சிற்பமாக 2 அடி உயரத்தில் 0.5 அங்குலத்துடன் அமையப்பெற்றுள்ளது.



**கருவறை அதிட்டானம்**



**கட்டடக்கலை**

### கருவறை பிரநாளம்

கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், மகாமண்டபங்களை கொண்டு முதல் திருச்சுற்றுடன் அமையப்பெற்றுள்ளது. இக்கோயில் கருவறையின் அதிட்டானமானது உபபீடம் பத்மஜகதி, மகாபட்டிகை கண்டம் முப்பட்டைக்குமுதம் கம்பு, கண்டம் பாதவர்க்கம் பட்டிகை, கண்டம், விரிந்த பத்மம் வேதிகை போன்ற கலையமைப்புகக்ளைக் கொண்டு பாதபந்த அதிட்டனமாக அமையப்பெற்றுள்ளது. கருவறையின் பித்தி பகுதியில் சதுரம், நாக பந்தம் எண்பட்டைகால், மாலஸ்தானம், கும்பம் தடி, கலசம், பத்மம் பலகை, வீரகண்டம், பூமுனை போதிகை போன்ற கலைக்கூறுகளைக் கொண்ட அரைத்தூண்களையும் தேவகோட்டங்கள் கும்பபஞ்சாரம் போன்றவைகளை கொண்டு அமையப்பெற்றுள்ளது. கருவறையைச் சுற்றிப்பதினைந்துஅரைத்தூண்களும்அர்த்தமண்டபச் சுவரில் 8 அரைத்தூண்களும் காணப்படுகின்றன. பித்தியின் மேல் எழுதகத்தை மறைத்தவாறு காட்டப்பட்டுள்ள கபோதத்தில் காணக்கூடுகளின் அலங்காரங்களும் பத்ரலதா போன்ற இலை கருக்குகளும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அதன்மேல் உள்ள பிரஸ்தரத்தில் யாழி வரிசைகள் காட்டப்பட்டுள்ளன. இக்கோயிலின் அதிட்டான வர்க்கத்தின் வடக்குபுறத்தில் குள்ளப்பூதம் சங்கினை இசைப்பதை போலவும் சிம்மத்தில் பத்ம இதழ்கள் குவிந்து விரித்து இருப்பது போன்ற அமைப்புடன் பிரநாளம் காட்டப்பட்டுள்ளது. பிரநாளத்தின் மீது குள்ளப்பூதமானது லலிதாசனத்தில் அமர்ந்துள்ளது. கருவறையின் விமானம் துவிதளவிமானமாக திராவிட கலைப்பாணியைக் கொண்டு அமையப்பெற்றுள்ளது. ஆகமத்தின் அடிப்படையில் சௌந்தர்ய விமானமாகக் குறிப்பிடப்படுகின்றது.

### அம்மன் கருவறை



அம்மன் கருவறை

அம்மன் கருவறையின் அதிட்டானத்தில் உபபீடம் கருங்கல்லாலும் உபானம் பத்மஜகதி பட்டிகை கண்டம் முப்பட்டைக் குமுதம், பாதவர்க்கம், கண்டம், பட்டிகை, கண்டம் பத்மம், வேதிகை கொண்டு அமையப்பெற்றுள்ளது. பித்தியில் தேவகோட்டங்களும் 18 புமுனைப் போதிகை அரைத்தூண்களும் காணப்படுகின்றன. ஏகதள விமானத்துடனும் அர்த்த மண்டபத்தாலும் அமையப்பெற்றுள்ளது.

### தூண்கள்

இக்கோயிலின் மகாமண்டபத் தூண்கள் நீள்சதுரம் 16 பட்டை பிரம்மகட்டு நாகபந்தம் பிரம்மக்கட்டு பதினாறு பட்டை சதுரம் எண் பட்டை சதுரம் வெட்டுப் போதிகை இவற்றுடன் கொடிகருக்கு வேலைப்பாட்டுடன் காணப்படுகின்றன. இதே வகையான தூண்கள் எண்பட்டை அமைப்புடனும் அமையப்பெற்றுள்ளன.



அர்த்தமண்டபத் தூண்கள்

### சிற்பங்கள்

இக்கோயிலின் அர்த்த மண்டபத்தில் விக்கிரமப்பெருமாள், வராகப் பெருமாள், லெஷ்மி நரசிம்மர், ஆண்டாள், விஸ்வக்சேனர்,

கருடாழ்வாரின் சிற்பங்களும் காணப்படுகின்றது. புடைப்பு சிற்பங்களாக சஞ்சீவி ஆஞ்சநேயரின் சிற்பங்களும் கருவறையின் விமானத்தில் சுதை சிற்பங்களாக விஷ்னுவின் அவதார சிற்பங்களும் அமைந்துள்ளன. பன்னிரண்டு ஆழ்வார்களின் சிற்பங்கள், வராகர், இலட்சுமி நரசிம்மர், விஸ்வக்சேனர் போன்றவர்களின் வடிவங்கள் நாயக்கர் காலச் சிற்பப் பாணியை நினைவு கூர்கின்றன. நாயக்கர் காலத்தைச் சார்ந்த நவநீத கிருட்டினர், இலக்குமி ஹயக்கிரீவர், இராமானுஜர், தேசிகர், சக்கரத்தாழ்வார், விஸ்வக்சேனர், நம்மாழ்வார் ஆகியோர்களின் உலோகப் படிமங்கள் இக்காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. சிற்பங்களைப் பற்றிய புகைப்படம் எடுக்க அனுமதி கிடைக்கப் பெறாததால் அவற்றைப் பற்றியத் தரவுகளை வெளிப்படுத்த முடியவில்லை.

### கல்வெட்டு

இக்கோயிலின் சுதை கட்டுமானத்தில் துண்டு கல்வெட்டு ஒன்று பதிக்கப்பெற்றவாறு காணப்படுகிறது. இதைத்தவிர வேறு கல்வெட்டுக்கள் இக்கோயிலில் காணப்படவில்லை.



**துண்டுக் கல்வெட்டு**

### இலக்கியச்சான்றுகள்

### புதத்தாழ்வார்

***தமருள்ளம் தஞ்சை தலையரங்கம் தன்காள்***
***தமருள்ளுந் தண்பொருப்புவேலை தமருள்ளம்***
***மாமல்லைக் கோவில் மதிட்குமந்தை யென்பரே***
***ஏவல்ல எந்தைக் கிடம்***

***(இயற்பா 2 திருவந்தாதி பாசரம் -70)***

### மணிக்குன்றப் பெருமாள் கோயில்

மணிக்குன்றப் பெருமாள் கோயில் நீலமேகப்பெருமாள் கோயிலுக்கு கிழக்கே அமைந்த கோயிலாகும். நம்மாழ்வாரின் பாடல் பெற்ற தலமாகும் (திருவாய்மொழி, 5-3-1). இக்கோயிலும் 16-17 ஆம் நூற்றாண்டுகளில் நாயக்கர் காலத்தில் பலகட்ட மாற்றங்களுக்கு உட்பட்டு இருக்கிறது. சங்கு சக்கரபாணியாக திருமால், ஸ்ரீதேவி பூதேவியுடன் கருவறையில் காணப்படுகின்றார். சுதையாலான சிற்பமாகும். தஞ்சை களிமேட்டுப் பகுதியில் இக்கோயில் இருந்திருக்கலாம் என்றும், பின்னர் தற்போதுள்ள இடத்தில் மராட்டியர் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நாயக்கர் கட்டடப் பாணியில் அரைத்தூண்கள் பூமுனைப்போதிகை வடிவங்களைத் தாங்கியுள்ளன. நாயக்கர் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டு இருக்கலாம் என்று இதிலிருந்து புலப்படுகிறது. இக்கோயில் இறைவனின் பெயர் மணிக்குன்றப் பெருமாள் ஆகும். கருவறையிலுள்ள பெருமாளின் சிற்பமானது 10 அடி உயரத்தில் 3 அங்குலத்தில் சுதைச்சிற்பமாக சுகாசனத்தில் ஸ்ரீதேவி பூதேவியுடன் அமர்ந்த நிலையிலுள்ளது. இச்சிற்பங்களுடன் உற்சவ மூர்த்திகளின் செப்புத் திருமேனிகளும் அமையப்பெற்றுள்ளன. இக்கோயிலில் இறைவியின் கருவறையானது அர்த்த மண்டபத்தின் தெற்குப்புற வாயிற் பகுதியில் சுதைக் கட்டுமானத்துடன் கூடிய தனிச் சன்னதி அம்புஜவள்ளி என்னும் பெயருடன் நான்கு கரங்களைக் கொண்டு அமையப்பெற்றுள்ளது.

### கட்டடக்கலை



**கருவறையின் அதிட்டானம்**



## வடக்குப்புற வாயிற்பகுதி மற்றும் விமானம்

இக்கோயிலின் கருவறையின் அதிட்டடமானது கருங்கல் உபபீட கட்டுமானத்தின் மேல் உபானம் பாதக்கண்டம், உபபீடம் பத்மஜகதி, கம்பு மகாப்பட்டிகை கண்டம், பத்மம் விருத்தக்குமுதம் பாதக்கண்டம் பட்டிகை விரிந்தபத்மம் வேதிகை போன்ற கலைக்கூறுகளைக் கொண்டு அமையப்பெற்றுள்ளது. இதன் மேலுள்ள பித்தியில் சதுரம், நாகபந்தம், கால் பட்டை, வரிமானம், மாலஸ்த்தானம், கலசம், தடி, குடம், பத்மம், பலகை, வீரக்கண்டம், வெட்டுப்போதிகை போன்ற கலைக்கூறுகளைக் கொண்ட 18 அரைத்தூண்களும் தேவகோட்டங்களையும் கொண்டு எழுதகத்தின் மேலுள்ள கபோதத்தில் கர்ணக்கூடுகள் மற்றும் பத்ரலதா போன்ற அலங்கார வேலைப்பாடுகளுடன் இக்கோயிலின் கருவறையானது அமையப்பெற்றுள்ளது. பிரஸ்தரத்தின் மேலுள்ள விமானம் விஷ்ணு அவதாரசிற்பங்களோடுஅலங்கரிக்கப்பட்ட துவிதள விமானமாகக் காணப்படுகின்றது. இவ்விமானம் மணிக்கூடம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## தூண்

இக்கோயிலின் அர்த்த மண்டபத் தூண்கள் பிரம்மக்கட்டு, சதுரம் பதினாறுப்படை பிரம்மக்கட்டு, சதுரம் பூமுனைப் போதிகை அமைப்புடன் மதலைத் தூண்கள் போன்ற அமைப்பினைக் கொண்டு காணப்படுகின்றன. அத்தூண்களின் மேல் சிம்மம் சித்திகரிக்கப்பட்டு சிம்மத் தூண்களாகவும் காட்டப்பட்டுள்ளன.



அர்த்த மண்டபத் தூண்கள்

## சிற்பக்கலை

இக்கோயிலில் உள்ள கருவறையில் விஷ்ணுவின் சிற்பமானது அமர்ந்த நிலையில் இடது காலை பீடத்தின் மீது கிடத்தப்பட்டவாறும் வலது கால் தொங்கவிடப்பட்டவாறும் சுகாசனமாக அமர்ந்தநிலையில் நான்கு கரங்களைக் கொண்டு பின்னிரு கரங்கள் சங்கு மற்றும் சக்கரத்தோடும் முன்னிரு கரங்கள் அபய மற்றும் வரத முத்திரையோடும் கழுத்தில் அணிகலன்களும் பீதாம்பர ஆடை தரித்து வலது மற்றும் இடது புறத்தில் ஸ்ரீதேவி பூதேவியின் சிற்பங்கள் அமாந்த நிலையில் சுதை சிற்பமாக ஏழு அடி உயரத்தில் ஐந்து அங்குலத்தில் அமையப்பெற்றுள்ளது. உற்சவமூர்த்திகளின் சிற்பகளும் செப்புத் திருமேனியாகக் காணப்படுகின்றன. கருவறையின் வெளிப்புறத்தில் நம்மாழ்வார், பூதத்தாழ்வார், மணவாழ மாமுனிவர், திருமங்கையாழ்வார் தனிச்சன்னதியில் அம்புஜவள்ளி தாயாரின் சிற்பங்களும் கருவறையை நோக்கியவாறு அஞ்சலி முத்திரையுடன் நின்ற நிலையில் கருடாழ்வாரின் சிற்பமும் கருவறையின் விமானத்தில் நரசிம்மர் போன்ற விஷ்ணுவின் அவதாரச் சுதை சிற்பங்களும் சித்திரிக்கப்படுகின்றன.

## கல்வெட்டுக்கள்

இக்கோயிலின் அர்த்தமண்டபத்தின் வடக்குப்புற வாயிற்பகுதியில் படிக்கட்டு சுவற்பகுதியியல் கல்வெட்டொன்று காணப்படுகின்றது. இதைத்தவிர வேறு கல்வெட்டுக்கள் எவையும் கிடைக்கவில்லை.



வடக்குப்புற வாயிற்பகுதிக் கல்வெட்டு

### வீரநரசிங்கப் பெருமாள் கோயில்

தஞ்சகனுடன் போரிட்ட நீலமேகப்பெருமாள் தன்னுருவை சிங்க உருவாக மாற்றி தஞ்சகனை அழித்த இத்தலத்திலுள்ள இறைவன் வீரநரசிங்கப் பெருமாள் என்றும் மேலசிங்கப் பெருமாள் என்றும் அழைக்கப்படுகின்றார். இக்கோயில் கருவறையின் சிற்பமானது நரசிங்கம் வடிவில் இடதுக்காலினைப்பீடத்தின்மீதுகிடத்தப்பட்டவாறும் வலதுகால் தொங்கவிடப்பட்டவாறும் சுகாசனமாக அமர்ந்தநிலையில் நான்கு கரங்களுடனும் பின்னிரு கரங்கள் சங்கு சக்கரத்துடனும் முன்னிரு கரங்கள் அபயம் மற்றும் வரத முத்திரையோடும் பீதாம்பர ஆடை தரித்து அணிகலன்களுடன் அலங்கரிக்கப்பட்டு 9 அடி உயரத்தில் 7 அங்குலத்தில் சுதைச் சிற்பமாக அமைக்கப்படடுள்ளது. இச்சிற்பத்தின் வலது மற்றும் இடது புறத்தில் ஸ்ரீதேவி, புதேவியின் சிற்பங்களும் காட்டப்பட்டுள்ளன. செப்புத் திருமேனிகளாக உற்சவ மூர்த்திகளின் சிற்பங்களும் காணப்படுகின்றன. இக்கோயிலில் உள்ள தல இறைவியின் பெயர் தஞ்சை நாயகி என அழைக்கப்படுகின்றது. இத்தாயாரின் சிற்பமானது இரண்டு அடி உயரத்தில் 0.7 அங்குலத்தில் நான்கு கரங்களுடன் நின்ற நிலையில் சுதைச்சிற்பமாக அமையப்பெற்றுள்ளது

### கட்டடக்கலை

நீலமேகம் மற்றும் மணிக்குன்றப் பெருமாள் கோயிலின் கட்டடக்கலைகளை விட இக்கோயிலின் கட்டடக்கலை அமைப்பு உயர்ந்த கடடுமானங்களுடன் அமையப்பெற்றுள்ளது நாயக்கர் காலத்தில் இக்கோயில் பல மாற்றங்களுக்கு உட்பட்டு இருக்கலாம். சோழர் காலத்தைச் சார்ந்த துண்டுக் கல்வெட்டொன்று அதிட்டானப் பகுதியில் காணப்படுகின்றது. கருவறையின் அதிட்டானம் மற்றும் பித்தியிலுள்ள (சுவர்) பூமுனைப்போதிகை அரைத்தூண்கள், தேவகோட்டங்கள், கும்பபஞ்சரங்கள் இக்காலத்திய கட்டடக்கலைப் பாணியை நினைவுபடுத்துகின்றன. இங்குள்ள தாயார் கோயிலின் அதிட்டானப் பகுதியில் நாயக்க அரசர் ஒருவரின் உருவம் காணப்படுகிறது. இச்சிற்பம் அச்சுதப்ப நாயக்கர் அல்லது விஜயராகவ நாயக்கரின் உருவமாக இருக்கக்கூடும் என்பது ஆய்வின் கருத்தாக இருந்து வருகின்றது. தஞ்சைநாயகி (தாயார்), திருமங்கையாழ்வார், ஆண்டாள் ஆகியோரின் சன்னதிகள் கோயிலைச்சுற்றி அமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கோயில்கள் நாயக்கர் காலக்கலைப்பாணியோடு அமையப்பெற்றுள்ளது. தஞ்சை நாயகியின் வடிவம் சுதையால் ஆனது. மராட்டிய மன்னர் துளஜா (1763-1787) ஆண்ட காலத்தில் இக்கோயிலின் மண்டபம் கட்டப்பட்டு இருக்கலாம் என்பது ஆசிரியர்களின் கருத்தாக இருந்து வருகின்றது. தஞ்சைப் பகுதியைச் சார்ந்த மேலைவெளித் தோட்டத்தில் முதலில் இக்கோயில் இருந்திருக்கலாம் என்றும், பின்னர் மராட்டியர் காலத்தில் இங்கே மாற்றம் செய்யப்பட்டிருக்கலாம் என்றும் இராசு குறிப்பிடுகின்றார். ஆனால் தூண்களின் பூமுனைப்போதிகை கலையமைப்புகள் நாயக்கர் காலத்தை நினைவுபடுத்துவதோடு நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம் என்று அண்மைக்கால ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.





கருவறை அதிட்டானம்



கருவறையின் விமானம்

இக்கோயிலின் புகைப்படம் மேலே காட்டப்பட்டவாறு கருவறை அர்த்தமண்டபம், மகாமண்டபம் திருச்சுற்று கொண்டு அமையப்பெற்றுள்ளது. இக்கோயிலின் கருவறையின் அதிட்டமானது கபோதபந்த உப பீடத்துடன் அதன்மேல் உபானம், ஜகதி, மகாபட்டிகை, கண்டம், விருத்தக்குமுதம், பாதக்கண்டம், பட்டிகை, பாதக்கண்டம், விரிந்தபத்மம், வேதிகை கொண்டு அமையப்பெற்றுள்ளது. இவ்வதிட்டானத்தில் உபபீட கபோதத்தில் உள்ள சிம்மமுக கர்ணக்கூடுகளில் விலங்குகளின் சிற்றுருவமும் வராகரின் உருவமும் சித்திரிக்கப்பட்டுள்ளன. இவ்வதிட்டானத்தின் அரைத்தூண் குடம், கலசம், தடி, பத்மம், பலகை, வீரகண்டம், வெட்டுப்போதிகை போன்ற கலைக் கூறுகளைக் கொண்ட 18 அரைத் தூண்களையும், தேவக்கோட்டங்களையும், தேவக்கோட்ட பஞ்சாரங்களையும் கும்ப பஞ்சாரங்களையும் கொண்டு கபோதத்தில் கர்ண அலங்காரங்களும் அதன் மேலுள்ள பிரஸ்தரத்தில் மூன்று தலங்களைகொண்ட திரிதள விமானம் அமையப்பெற்றுள்ளது. இவ்விமானம் வேதசுந்தர விமானம் என்று குறிப்பிடப்படுகின்றது.

**அம்மன் கருவறை**





**அமமன் கருவறை அதிட்டானம் மற்றும் விமானம்**

அம்மன் கருவறையின் அதிட்டமானது விமானம், பட்டிகை, பத்மம், கண்டம், எண்பட்டை, விருத்தக்குமுதம், பாதக்கண்டம். கபோதப்படடிகை போன்ற அங்கங்களைக் கொண்ட கபோதபந்த உபபீடத்ததையும் அதன்மேல் உபாணம், பத்மஜகதி. பட்டிகை, பத்மபட்டிகை, பாதக்கண்டம், விருத்தகுமுதம், பாதக்கண்டம், விரிந்தபத்மம், வேதிகை போன்றக் கலைக் கூறுகளை கொண்ட வர்க்கப்பேத அதிட்டானமாக காணப்படுகிறது. இவ்வதிட்டான அடுக்குகளில் பத்மம் குவிந்து விரிந்ததைப் போல் வடக்குபுறத்தில் பிரநாளம் அமையப்பெற்றுள்ளது. இவ்வதிட்டானத்தின் பித்திப் பகுதியில் புமுனைப்போதிகை அமைப்பைக் கொண்ட 12 அறைத்தூண்களும், தேவக்கோட்டங்களில் சதுரம், கால், மாலஸ்தானம், குடம், கலசம், தடி, பத்மம், பலகை, வீரக்கண்டம, கபோதம். கபோதனத்தில் உள்ள எழுத்தகத்தில் கொடுங்கை வேலைப்பாடும் அதன்மேல் கிரீவம் போன்ற வேலைபாடுகளும் அமைந்துள்ளன. இதன் மேலுள்ள பிரஸ்தரத்தில் விமானம் இரண்டு தளங்களைக் கொண்ட துவிதளவிமானமாகக்காட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் அதன் கிழக்கு மூலையில் அம்மன் கருவறையின் எதிர்ப்புறமாக மடப்பள்ளி அமையப்பெற்றுள்ளது.

**சிற்பங்கள்**

இக்கோயிலில் ரெங்கநாதர், ஆஞ்சநேயர், நரசிம்மர், யோக நரசிம்மர், வரதராஜர், விஸ்வக்ஸேனர், பெரியநம்பியார், ஆளவந்தார், ராமானுஜர், மனவாள மாமுனிகள், கருடாழ்வார், சஞ்சீவி ஆஞ்சநேயர், திருமங்கையாழ்வார் போன்ற சிற்பங்கள் சுதைச் சிற்பங்களாகவும், கறச்சிற்பங்களாகவும், புடைப்புச் சிற்பங்களாகவும் காணப்படுகின்றன. இக்கோயிலின் கருவறையின் விமானத்தில் யோகநரசிம்மர், நரசிம்மர், லெக்ஷ்மி நரசிம்மர் இவற்றுடன் விஷ்ணுவின் அவதாரச் சிற்பங்களும் கருடாழ்வாரின் சிற்பங்களும் காணப்படுகின்றன. இதைப்போல அம்மன் கருவறையின் விமானத்திலும் சுதை சிற்பங்கள் அமையப்பெற்றுள்ளன.

**இலக்கியச்சான்று புதத்தாழ்வார்**

**தமருள்ள தஞ்சை தலையரங்கம் தண்கால்**
**தமருள்ளுத் தண்பொருப்புவேலை தமருள்ளும்**
**வம்புலாஞ் சோலை மாமதின் தஞ்சை**
**(இயற்பா-2 திருவந்தாதி பாசுரம்-70)**

**மாமணிக் கோயிலே வணங்கி**
**தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக்கோவில்**
**பெரிய திருமொழி (2-5-2)**

**தவநெறிக்கு ஓர் பெருநெறிலை, வையங்காக்கும்**
**கடும்பரிமேல் கற்கியை நான் கண்டு கொண்டே**
**பெரிய திருமொழி (2-5-2)**

**பெரிய திருமொழி முதற்பரிகம்**

**தமருள்ள தஞ்சை தலையரங்கம் தண்கால்**
**தமருள்ளுத் தண்பொருப்புவேலை தமருள்ளும்**
**(இரண்டாம் திருவந்தாதி 70 பூதத்தாழ்வார்)**

**துடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக்கோயில்**
**தவநெறிக்கோர் பெருநெறியை வையங்காக்கும்**
**பெரிய திருமொழி 2.5.3**

**வம்புலாஞ்சோலை மாமதின் தஞ்சை மாமணிக்கோயிலே**
**வணங்கி நம்பிகாளல்ல நான் கண்டுகொண்டேன்**
**பெரிய திருமொழி 1.1.6**

**பொன் செய்மால்வரையை மணிக்குன்றினை**
**யன்றி யென்மனம் போற்றிபென்னாதே**
**பெரிய திருமொழி 7.3.9**


(பூதத்தாழ்வார், இயற்பா 2, திருவந்தாதி, பா.70 திருமங்கையாழ்வார் 7-3-9, பெரிய திருமொழி).

## புராணவரலாறு

கிரேதாயுகத்தில் தஞ்சகன், தண்டகன், தாடகன் என்று மூன்று அசுரர்கள் தவம் செய்து சிவபெருமானிடம் இருந்து அவரால் எந்தத் துன்பமும் ஏற்படாத வரம் பெற்றனர். இதனால் கர்வம்கொண்டு அனைத்து முனிவர்களையும், ரிஷிகளையும் துன்புறுத்தி வந்தார்கள். பாற்கடலைக் கடைந்து கிடைத்த அமுதத்தை மணிமுத்தா நதியில்விட்டு, பராசரர் முனிவர் பசுமையான வெண்ணாற்றங்கரையில் ஆசிரமம் அமைத்து ஹரிநாமத்தை ஜபித்து தவம் செய்து வந்தார். அரக்கர்கள் முனிவருக்குத் தொல்லை கொடுத்து, தவத்தைக் கலைத்து அந்த இடத்தைவிட்டு விரட்ட நினைத்தனர். பராசரர் அவர்களிடம் தவறை எண்ணித் திருந்துமாறு அறிவுரை கூறினார். அரக்கர்கள் பராசரர் முனிவரின் அறிவுரையை ஏற்க மறுத்தனர். எனவே பராசரர் முனிவர் பெருமாளின் உதவியை நாடினார். பெருமாள் பக்தரைக் காக்கக் கருடனுடன் விரைந்து வந்தார். தஞ்சகன் யானை வடிவில் கஜமுகனாக தோன்றி பெருமாளிடம் போரிட்டான். பெருமாள் நரசிம்மயாளி வடிவில் தோன்றி தம் சக்ராயுதத்தால் தஞ்சகனைத் தோற்கடித்தார். தஞ்சகன் சரணடைந்தான். இந்தச் சம்பவத்தை நினைவூட்டும்விதமாக இந்த இடம் தஞ்சகனூர் என்று அழைக்கப்பட்டது. நாளடைவில் தஞ்சகனூர் தஞ்சாவூர் என்று மருவியது. பெருமாள் நரசிம்மயாழி வடிவில் வந்ததால் இவ்விடம் தஞ்சையாழி என்றும் அழைக்கப்படுகிறது. அதன் பின்னர் தண்டகன் தண்டகாரண்யத்தில் வராஹ அவதார மூர்த்தியாலும் தாடகன் கிருஷ்ணாவதாரத்தின்போது காளி தேவியாலும் வதம் செய்யப்பட்டனர். அரக்கர்களை அழித்தபின் பெருமாள், பராசர முனிவருக்கு நீலமேகப் பெருமாளாகக் காட்சியளித்தார். பக்தருக்கு அபயம் தந்த பெருமாள் இவ்விடத்தில் வெண்ணாற்றங்கரையில் மூன்று கோவில்களில் அருள்பாலிக்கிறார். செங்கமலவல்லித் தாயார், நீலமேகப் பெருமாள் கோவில், அம்புஜவல்லித் தாயார், மணிகுன்றப் பெருமாள் கோயில், தஞ்சைநாயகித் தாயார் வீரநரசிம்மர் திருக்கோவில் ஆகும் எனப் பராணங்களில் குறிப்பிடப்பெறுகின்றன.

## முடிவுரை

தஞ்சைக்கு பெயர் தந்தக் கோயிலாகப் போற்றப்படும் இம்மாமணிக் கோயில்கள் விஷ்ணுவின் புராணச் சிறப்புக்களை எடுத்துக்கூறும் விதமாகவும், வைணவச் சமயத்தைப் போற்றும் விதமாகவும் அமையப்பெற்றுள்ளன. இக்கோயில்களின் கட்டடக்கலை, சிற்பக்கலையில் நாயக்கர்களின் கலைப்பாணியின் சிறப்புக்களை எடுத்துக்காட்டும்விதமாக. அமைந்துள்ளன.




**தஞ்சாவூர் மாவட்டம் (வெண்ணாறு) நிலவியல் வரைபடம்**

## மேற்கோள் நூல்கள்


1. அலெக்சாண்டர், கே. சி., (1975), தஞ்சாவூரில் விவசாய பதற்றமும் தேசிய சமூக மேம்பாட்டு நிறுவனமும், ஹைதராபாத்.
2. இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை (ஏ.எஸ்.ஐ) புது தில்லி ஆண்டு அறிக்கை. கேப்ரியல்டீட்ரிச், (1977), கிழக்கு தஞ்சாவுரில் உள்ள மதம் மற்றும் மக்கள் அமைப்புகள் மற்றும் சமூகத்தின் ஆய்வுக்கான கிறிஸ்தவ நிறுவனம், மெட்ராஸ்.
3. சாந்தி. செ (2019) ஆவுடையார்கோயில் வட்டாரக் கோயில்களில் தேவகோட்டச் சிற்பங்கள்தமிழ்மொழிமற்றும்இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ் தொகுதி-2 வெளியீடு-1 E-ISSN:2581-7140,www.ijtlls.com.https://www.researchgate.net/publication/334952398_The_Devakotta_Sculptures_of_the_Temples_around_Avudayar_Kovil
4. சாந்தி.செ, (2019) திருக்கோயில்களின் தேவகோட்டச் சிற்பங்களும் சமூகப் பின்னணியும்,பன்னாட்டு, கருத்தரங்கம் சமூக நல்லிணக்கத்திற்கு திருக்கோயில்களின் பங்கு, தமிழ் துறை அழகப்பா பல்கலைக்கழகம் காரைக்குடி ISBN:978-81-934510-1-4 https://www.researchgate.net/publication/340546743 tirukkoyilkalin tevakottac cirpankalum camukap pinnaniyum
5. சாந்தி. செ, (2019) திருக்கோயில்களின் கட்டடக்கலை நுட்பங்களும் கலைச் சொற்களும்- ஓர் ஒப்பீடு, பன்னாட்டு கருத்தரங்கம், கோயிற் பண்பாடு, தமிழ் பண்பாட்டுமையம் அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி. ISBN: 978-93-84428-37-2 https://www.researchgate.net/publication/340858900 tirukkoyilkalin kattatakkalai nutpankalum kalaic corkalum-or oppitu.
6. சாந்தி. செ (2020) கட்டிடக்கலை நுட்பங்களில் ஆவுடையார்கோயில் தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ் அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ் தொகுதி - 2 வெளியீடு-2 E-ISSN:2581-7140, DOI: 10.5281/zenodo.3628597, www.ijtlls.com.
7. சாந்தி.செ(2020),ஆவுடையார்கோயில் வட்டாரக் கல்வெட்டுகள், கொற்றவை வெளியீடு, மதுரை, https://www.researchgate.net/publication/342365536 Avudaiyarkoyil Vattara Kalvettukal
8. சாந்தி. செ (2020), ஆவுடையார்கோயில் வட்டாரக் கட்டடக்கலை, கொற்றவை வெளியீடு, மதுரை, https://www. researchgate.net/publication/342623469 Avudaiyarkoyil Vattara Kattatakkalai.
9. சாந்தி.செ(2020),ஆவுடையார்கோயில் வட்டாரச் சிற்பங்கள், கொற்றவை வெளியீடு, மதுரை, ISBN: 978-93-86568-77-9.
10. சாந்தி. செ. (2019). சரவணக்குமார்.ஏ. ஆர் ஆவடையார்கோயில் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் - ஓர் ஆய்வு, ஜர்னல் ஆஃப் மாடர்ன் தமிழ் ஆராய்ச்சி தொகுதி- 7, வெளியீடு -1, பக்கம் 762-776, ராஜா வெளியீடு, திருச்சி. ISSN 2277-8616, https://www.re-

searchgate.net/publication/333446842 AVUDAIYAR KOVIL INSCRIPTIONS AND COPPER PLATES- A STUDY

11. சாந்தி. செ., குணசேகரன்.எஸ்., (ஜூன் 2020) தூத்துக்குடி மாவட்டத்தின் முக்கிய இடங்கள் - ஒரு புவியியல் வரைபடக் கண்ணோட்டம், தொகுதி 14, வெளியீடு -6, ஜிடியன் பல்கலைக்கழக இதழ், https://doi.org/10.37896/jxu14.6/274.
12. தஞ்சாவூர் மாவட்டத்தின் விவரச்சுவடிகள், தொகுதி-1, (1906), மெட்ராஸ்.
13. தென்னிந்திய கல்வெட்டுகள் (SII) ASI
14. நீலகண்டசாஸ்திரி, கே.ஏ., (1975), சோழர்கள், மெட்ராஸ் பல்கலைக்கழகம், மெட்ராஸ்
15. பாலிகா பி.எஸ்., (1957) தஞ்சாவூர் மாவட்ட கையேடு, மெட்ராஸ்
16. பாட். எஸ். சி., (1999), இந்திய மாவட்ட விவரச்சுவடி, புதுதில்லி
17. ராஜு. எஸ்., (1994), நெஞ்சை அள்ளும் தஞ்சை, வெளியீடு, கொங்கு ஆய்வுமையம், தஞ்சாவூர்.
18. ஹெமிங்வே, எஃப்.ஆர்., (1906), மெட்ராஸ் மாவட்ட விவரச்சுவடிகளில் தஞ்சாவூர் மாவட்டம், தொகுதி - 1, மெட்ராஸ்.